லஞ்ச ஊழல் வரலாறு கண்டிராக் கையாடல்

Phone No. 4604
விலை அணா ஒன்று!

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (5—11—49) | வெளியூர் (6—11—49) | இதழ் 83

இருபத்தொரு லட்சம் எடுத்து விழுங்கப்பட்ட 'கோரம்'

ஐதராபாத் காங்கிரஸ் பெருந்தலைகளின் "தேசத் தொண்டு"!

தரித்திர நாராயணர் தனக்கோடிகளான விந்தை

இராணுவ கவர்னர் புகார்: சமஸ்தான இலாகா திண்டாட்டம்

ஐதராபாத் சமஸ்தான காங்கிரஸைச் சேர்ந்த பிரபல தலைவர்கள் சிலர் சுமார் 21 லட்சம் ரூபாயைக் கையாடியதாகக் கூறப்படும் துணிகர சம்பவமொன்றின் தகவல் ஒன்று கிடைக்கிறது. ஐதராபாத்தில் கடந்தவாண்டு 'போலீஸ் நடவடிக்கை'க்கு இந்திய கலவர நாட்களில் ஐதராபாத் சமஸ்தான பாங்கியின் கிளை யொன்றில் மேற்படி ரூ. 21 லட்சம் கொள்ளையிடப்பட்டிருக்கிறது. மத்திய மாகாண எல்லையிலுள்ள நந்தர் மாவட்ட உமிரிகிளை பாங்கியிலேயே மேற்படி சூறையாடல் நடைபெற்றிருக்கிறது.

இதில் புலன் விசாரணை நடத்திய ஐதராபாத் இராணுவ கவர்னர், தான் கண்டறிந்தவற்றை விளக்கமான அறிக்கையொன்றின் மூலம் சமஸ்தான இலாக்காவுக்குத் தெரிவித்தார்; ஆனால் குற்றவாளிகள் மீது எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்பெறவில்லை; காரணம் குற்றவாளிகளுடன் பெரும்பாலோர் சமஸ்தான காங்கிரஸின் பெருந்தலைகள் என்பதுதான்.

காங்கிரஸ் லஞ்ச ஊழல் வரலாற்றில் இத்தகைய ஒன்றுமே நாடு முழுதும் இருந்ததில்லை யென்ற அளவில் உமிரி பாங்கி சூறையாடல் பொருளின் கையாடல் கைங்கர்யம் நடந்தேறியிருக்கிறது. ஐதராபாத் மக்களுக்குச் சமஸ்தான காங்கிரஸ் மீது மேலும் எரிச்சல் வந்துற இது பெருந்துணையாயிருந்திருக்கிறது. கொள்ளை கொண்ட பணத்தைக் கொண்டு கொழுத்துப் பெருத்தும் களித்துங் கொண்டனர் காங்கிரஸ் தலைவர்கள்.

இவர்களின் அன்றைய நிலை என்ன? இன்று எப்படியுள்ளார்கள்? அன்று வறுமைப் பிணியேத் தோழமையாகக் கொண்டிருந்த இவர்கள் இன்று, சொத்து—சுகம் பெற்றுவிட்டார்கள்; கார்—காவல் பெற்றுவிட்டார்கள்; எளிதில் இன்பவாழ்வின் உச்சத்தை யெட்டிவிட்டார்கள். லஞ்சப் பணத்துக்குக் குண்டர்களை விலைக்கு வாங்கித் தங்களுக்குத் துதிபாடவும், மாற்றுக்கட்சியார் மீது வசைமாரி பெய்யவும், பதவிவேட்டைக்கான பூர்வாங்க வேலைகளைச் செய்யவும் ஏற்பாடு செய்து கொண்டனர்.

அண்மையில் நடைபெற்ற சமஸ்தான காங்கிரஸ் தேர்தல்களின்போது மேற்படி கொள்ளைப்பணம் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. குண்டர்களை விலைக்கு வாங்கவும்; எதிரிகளின் மண்டையைப் பிளக்கவும்.

ஐதராபாத் நிர்வாகத்தார் நடத்திய விரிவான புலன் விசாரணைகள், கொள்ளைப் பணம் இன்னும் பெருத்த அளவில் பெருங் காங்கிரஸ் தலைவர்களிடம் மிகுந்து கிடக்கிறதென்றும் அதைக் கொண்டு அவர்கள் 'போக—பாக்யம்' துய்த்து வருகிறார்களென்றும் தெளிவாகக் காட்டுகின்றனர்.

இவ்விதம் கொள்ளையிட்டத் திருவிளையாடல் வந்துற்றதெப்படி? இந்திய சர்க்காரின் 'போலீஸ் நடவடிக்'கைக்கு முந்தி சமஸ்தான காங்கிரஸார் மத்திய மாகாண எல்லைப் பகுதியில் சிற்சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். சமஸ்தான காங்கிரசுக்கு பலம் மிக்கிருந்த இடத்திலெல்லாம் ரஸாக்கர் கொட்டத்தை யடக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. அந்த நோக்கில்தான் சந்தடி சாக்கில் அந்த காங்கிரசார் உமிரியிலுள்ள சமஸ்தான பாங்கியில் புகுந்து விட்டனர்.

பாங்கியை முற்றுகையிட்டக் கூட்டம் அங்கிருந்த காஷியரை (பொருளாளரை)க் கொன்று போட்டுவிட்டு, பணப் பெட்டிகளை உடைத்துத் திறந்து அங்கிருந்து 21 லட்சம்வரை கரன்ஸி நோட்டுகளாக எடுத்தேகினர். இத்தொகை "நிர்மாண வேலைகள்" என்ற பெயரில் சமஸ்தான காங்கிரஸ் தலைவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டது.

இப் பணம் சமஸ்தான காங்கிரசின் நிர்வாகக் குழுவினர் கையில் சிக்கிக்கொண்டது. அக்குழு இப்பெருந் தொகையின் பெரும் பகுதியை 'சுவாகா' செய்து விட்டதோடு, ஒரு பகுதியினைக்கொண்டு அவையத் தேர்தல்களில் மாற்றுக் கட்சியினர் படைகளைத் தகர்க்கப் பயன் படுத்திக் கொண்டது.

—'பிளிட்ஸ்'

நேருவும் நயாகராவும்!



பண்டித நேருவை அமெரிக்காவிலுள்ள நயாகரா நீர்வீழ்ச்சி முதல் தடவையாகக் கண்டு, பெரிதும் வியப்படைந்துவிட்டதாம்! தன்னுடைய 'நீர் வீழ்ச்சி'யைக் காட்டிலும், நேருவின் 'சொல் வீழ்ச்சி' பெரிதாக இருப்பதே, அது அடைந்த வியப்புணர்ச்சிக்குக் காரணமாம்!

—'சங்கர்ஸ் வீக்லி'

சர்க்கரை கரைகிறது

ஒவ்வொரு ரேஷன் கார்டின் மீதும் வாரத்திற்கு ஒரு வீசை சர்க்கரை அளிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனால் அப்படி ஒரு நாளும் நடந்து விடவில்லை.

எனவே, வடநாட்டிலிருந்து சர்க்கரை வந்து கொண்டிருக்கிறதென்றும் அதுவரை ஒவ்வொரு ரேஷன் கார்டின் மீதும் அரை வீசை சர்க்கரை கொடுக்கப்படுமென்றும் அரசாங்கம் அறிவித்தது.

இந்த ஏற்பாடு நடைமுறையில் வருவதற்குள்ளாகவே இன்னுமொரு உத்தரவை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது.

இப்புதிய உத்தரவு நவம்பர் 13-ஆந்தேதி முதல் நடைமுறையில் வருகிறதாம். இதன்படி வாரத்திற்கு ஆளுக்கு 2 பலம் சர்க்கரை வழங்கப்படும். இதனுடன், மாதம் ரூ. 100க்கு மேல் வருமானமுடையவர்களுடைய குடும்பத்தில் தலைக்கு ஒரு வாரத்திற்கு 3 பலம் சர்க்கரை தனிப் பங்காக அளிக்கப்பட்டு வரும்.

சேவை சிறப்புற வேண்டும்

வீணிற் செலவிடும் வணிகர் திருந்தினால் நலம் பெறுவர்

வாலாஜாபாத்தில் இரண்டு கோவில்களின் கும்பாபிஷேகம் மண்டபாபிஷேகம் முதலியவை, சென்னை மருந்து வர்த்தகர் ஒருவரால் நடத்தப்பட்டன. இதற்குப் பிரபல வர்த்தகர்கள் சென்றிருந்தனர். இதுபோன்ற பொதுச்செயல்களில் தாங்கள் பணமளிக்கத் தயாராயிருப்பதாக என்று வர்த்தகர்கள் அங்குப் பேசினர். டி. ராஜன் அண்ணாமலை (செட்டியார்) வருமானவரியைக் குறைத்து மரணவரி போடுமாறு அரசாங்கத்துக்கு இச்சந்தர்ப்பத்தில் ஆலோசனை கூறினார். தலைமை வகித்த வணிகர், பொருளீட்டும் வணிகர்கள் பொதுச்சேவைக்குப் பணம் தரவேண்டுமென்றும், தம் புகழுக்காக அவைச் செய்யாமல் புகழையும் தியாகம் செய்து, அறிவைப்பரப்ப வேண்டுமென்றும் கூறினர். இவ்வளவும் சரி.

ஆனால் அங்கு நடந்தேறியவை கோவில் கும்பாபிஷேகங்களே. நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் 10 பேருக்கு ஒரு கோயில் வீதம் பெருகிக்கிடக்கின்றது. இந்நிலையில் மேலும் மேலும் கோவில்களைக் கட்டுவதோ புதுப்பிப்பதோ தேவையற்றவேலை. தலைமை வகித்த வணிகர் கூறியதுபோல, அறிவைப் பரப்பும் வேலையே மிக முக்கியமானதாகும். அறிவைப் பரப்பாமல் கோவில்களைக் கட்டிவைப்பதால், தெய்வபக்தி ஒழுக்க ஈனத்துக்கே பயன்படும். கள்ளன் தனக்குத் திருட்டு கிடைத்தால், தேங்காய் உடைப்பதாகப் பிரார்த்தித்துக் கொள்ளத்தான் கோயில் பயன்படும். அறிவைப் பரப்பினால் மனிதன் உயர்வடைவான்.

அதே வாலாஜாபாத்தில் மருந்துக் கடையில் பொருளீட்டிய இந்த வணிகர் ஓர் உயர்தரப் பள்ளிக்கூடம் அமைத்து, ஏழை மக்களுக்கு இலவச உயர்தரக்கல்வி என்ற ஒரு தொண்டை ஆற்றியிருந்தால், அல்லது, விஞ்ஞான ரீதியில் புதிய கைத்தொழில்களைக் கற்பிக்கும் கலாநிலையம் ஒன்றைத் துவக்கியிருந்தால் மக்கட்சேவை எவ்வளவு உயர்ந்ததாயிருக்கும்! எத்தனை மக்களுடைய நல் வாழ்விற்கு வழிகாட்டியாயிருந்திருக்கலாம். கும்பாபிஷேகத்தால் வரப்போகும் பயன் என்ன! இனியேனும் வர்த்தகர்கள் இத்தகைய வீணாடம்பர செயல்களில் பணத்தைப் பாழாக்காமல் நாட்டு முன்னேற்றத்திற்கும் மக்கள் நலத்திற்குமான நல்ல தொண்டுகளாற்ற முன்வர வேண்டுகிறோம்.

மாலை மணி

சென்னை 5—11—49 சனிக்கிழமை

வாழ்க வெற்றி!

விடுதலை வேட்கை உணர்வால் உந்தப்பட்டு, ஏகாதிபத்ய வல்லரசின் வலிய பிடியிலிருந்து விடுபட, விடுதலைப்போராட்டங்களை நடத்தி, வெற்றிப்பாதையின் படிக்கட்டுகளில் விடாமுயற்சியுடன் முன்னேறி, கோட்டையின் வாயிலில் நுழைந்து விட்டது இந்தோனேஷியா! அதன் வெற்றிக்கு நமது வாழ்த்து!

டச்சு தன் இருப்புப் பிடியை இதுவரையில் இந்தோனேஷியாவிலிருந்து அகற்றிக்கொள்ள விரும்பவில்லை! ஏகாதிபத்யத்தின் இறுமாப்பு மும்முரமாக வேலை செய்தது! இந்தோனேஷியாவின் கரும்புக்காடுகள் பிணக்காடுகளாயின! கட்டிளங்காளைகள் தாய் நாட்டின் விடுதலைக்காகக் குருதி வெள்ளத்தில் தோய்ந்தெழுந்து நின்றனர்! பெண்கள் அலறி ஓடி திக்கற்ற அகதிகளாகக் காட்சி அளித்தனர்! மாளிகைகள் சரிந்தன! மாடங்கள் இடிந்தன! பொருள்கள் பாழாயின! பொலிவு குன்றியது! இவ்வளவும் ஆன பிறகு, டச்சு, இந்தோனேஷியாவின் அவாவை நிறைவேற்றித்தர இணங்கி யுள்ளது. விளைவு, போரின் மூலமாக, வலிவை ஆதாரமாகக் கொண்டு காணப்படாமல், அறிவை-உண்மை உணர்ச்சியை ஆதாரமாகக் கொண்டு ஏற்பட்டுள்ளது என்பதை அறிய, மிக மகிழவேண்டியிருக்கிறது.

இந்தோனேஷியா — டச்சு: இவைகளுக்கிடையே காணப்பட்ட வேண்டப்படாத நிலைகளுக்கு முடிவு ஏற்பட்டுவிட்டது நீண்ட சச்சரவு முடிந்தது—தீராத பிரச்சினை தீர்ந்தது—புதிய நாடு பிறந்தது—ஐக்கிய அமைப்பு அமைந்தது

இந்தோனேஷியா முழு அரசியல் அதிகாரத்தையும் பெறலாம். அதுவும் இவ்வாண்டு இறுதிக்குள் பெற்றுவிடலாம். இந்தோனேஷியாவும்—நெதர்லாந்தும் ஐக்கிய அமைப்பாக அமைந்து வாழலாம்.

டச்சுப் படைகள் நாளடைவில் வெளியேறிவிடும்.

விண்-நிலம்-நீர்ப்படைப் பயிற்சியைக் கொடுக்க டச்சு ராணுவ அதிகாரிகள் இந்தோனேஷியாவில் தங்கி உதவி புரிவர்.

சுரபயா இந்தோனேஷியா கடற்தளமாக இருக்கும்.

டச்சு அரசாங்க அலுவலாளர்கள் இந்தோனேஷியாவில் இருக்க அல்லது இந்தோனேஷியாவை விட்டு வெளியேற இரண்டாண்டு காலம் விடப்படும்.

கடன் பளுவில் மூன்றிரண்டு பங்கை இந்தோனேஷியாவும், ஒரு பங்கை டச்சும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார—வர்த்தக விஷயங்களில் டச்சுக்குத் தனிச் சலுகைகள் கொடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட உடன்பாடுகள், டச்சு—இந்தோனேஷியா பிரதிநிதிகளிடையே, ஹேக் மாநாட்டில் உருப்பெற்றுள்ளன. உறவு முறையில் இத்தகைய முடிவுகள் ஏற்பட்டது பாராட்டுதற்குரியதாகும்.

இந்த உடன்பாடுகளை ஐ. நா. அவை, மேற்பார்வையாளராக இருந்து நிறைவேற்றித் தரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உருவான உடன்படிக்கைகளை, எவ்வளவு விரைவாக நடைமுறையில் கொண்டு வரமுடியுமோ, அவ்வளவு விரைவில் கொண்டுவர; இந்தோனேஷிய மக்கள் பிரதிநிதிகளும்; டச்சு மக்கள் பிரதிநிதிகளும் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான், உரிமை வேட்கை, உரியமுறையில் காப்பாற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்; ஹேக் வட்டமேஜை மாநாட்டில் பயன் ஏற்பட்டதாகவும் கருதப்படும்.

இந்தோனேஷிய பொருளாதாரத் துறையில், டச்சு தன் பிடியை இன்னமும் கொஞ்சம் வைத்திருக்கிறது. அதனையும் அடியோடு அகற்றி, அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் ஆகிய எல்லாவற்றிலும் முழுச் சுதந்திரம்பெற்ற நாடாக இந்தோனேஷியாவை ஆக்க வேண்டிய பொறுப்பு, இந்தோனேஷியா விடுதலை வேட்கையுடையோரின் நீங்காக் கடமையாகும்.

டச்சு-இந்தோனேஷியா, ஐக்கிய அமைப்பு, இந்தோனேஷியாவின் அடிப்படை உரிமைகளை எவ்விதத்திலும் பாதிக்காமல் பார்த்துக்கொள்வதில், இந்தோனேஷியர்கள் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும்!

எப்படியோ இந்தோனேஷியா வல்லரசின்பிடியிலிருந்து விலகித் தனித்து வாழும் தகைமை பெற்றுவிட்டது. ஏகாதிபத்திய வல்லரசுகளின் சாம்ராஜ்யக் கோட்டைகள் ஒன்றன் பின் ஒன்றாகச்சரிந்துவருகின்றன. அதிலே ஒன்றுதான் டச்சு வல்லரசு வீழ்வதும், இந்தோனேஷியாவிடுதலை பெறுவதும்.

அரசியல் சாம்ராஜ்யங்கள் அழிந்துபட்டுவந்தாலும், அழிக்கப்பட வேண்டிய பொருளாதார சாம்ராஜ்யங்கள், உருக்கொண்டு வருகின்றன. அவைகளை உருக் கொள்ளாமலும், உருவானவைகளை நிலைத்து நிற்காமலும் செய்ய வேண்டிய பெரும் பணியை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு, விடுதலை மணங் கொள்ள விரும்பும் ஒவ்வொரு நாட்டினுடையவுமான இன்றியமையாத கடமையாகும்.

அரசியல் சுதந்திரத்தை ஒரு சாதனமாகக் கொண்டு பொருளாதார சுதந்திரத்தைப் பெற இந்தோனேஷியா முயலவேண்டும். இல்லையானால், விடுதலை வெறும் மயக்கே!

விடுதலைப் போராட்டத்தில் வெற்றிபெற்றுள்ள இந்தோனேஷியாவுக்கு, விடுதலைப் போராட்டத்தில் வெற்றிபெற விரும்பி நிற்கும் திராவிடர்களாகிய நாம் வெற்றி வாழ்த்துக் கூறுகிறோம்! வாழ்க இந்தோனேஷியா வெற்றி!

நம் மாநிலக் கல்விக்கு மாற்றாந்தாயன்பு

மத்திய அரசாங்கப் போக்கை அறிவிக்கும் உரிமை தவிர வேறொன்றறியாச் சென்னை அமைச்சர்

டாலர்-ஸ்டர்லிங்குடன் ரூபாய் மதிப்பைக் குறைத்தது விட்டது நல்ல செயல் அன்றென்றும், அதனால் நாடு பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி கஷ்டமடைய நேரிடுமென்றும், இவ்வாறு இந்திய அரசாங்கம் செய்தது, அவசியமற்றதும் அவசரப்பட்டதுமான செயலேயாகுமென்றும் நாம் கூறினோம். ஆனால், அரசாங்க நிர்வாகிகளுக்கு அது சரியெனப்பட்டது. எந்தக் காரணத்தால் அது சரி என்பதை அவர்களும் விளக்கவில்லை. நாட்டு மக்களும் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இவ்வளவு நாட் கழிந்த பிறகு மாகாணங்கள் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் கேட்கும்போது சர்தார்படேல் கூறுகிறார், இந்தியா பொருளாதார நெருக்கடியில் இருப்பதாக. சென்னைக் கல்வி அமைச்சர் கூறுகிறார் அண்மையில் ஏற்பட்ட நாணய மதிப்புக் குறைவு காரணமாக அரசாங்கத்துக்குமிகாக கஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்று.

இதன் பலன் என்ன? எல்லாச் செகண்டரிப் பள்ளிக்கூடங்களையும் சென்னை அரசாங்கமே எடுத்துக் கொண்டு நடத்தினால், பண உதவி செய்வதாக வாக்களித்திருந்த மத்திய அரசாங்கம் இப்போது அதனை மறந்துவிட்டது. முதியோர் கல்வித் திட்டத்துக்கு 17 லட்சம் ரூபாய் 'கிராண்ட்' அளிப்பதாக உறுதியளித்திருந்த மத்திய அரசாங்கம் இப்போது மறந்துவிட்டது. ஆனால் இதே சமயத்தில், பம்பாய், பீஹார், ஐ. மா. போன்ற மாநிலங்களைக் கவனியுங்கள். அங்கெல்லாம் கல்வியை வளர்க்க என்னென்ன நடக்கின்றனவென்பது தெரியும். முதியோர் கல்விக்காக பீஹார் வகுத்துள்ள திட்டத்தைப் பாருங்கள்! சென்னை மட்டுமா இந்த அவதிக்குள்ளாக வேண்டும்?

மேலும், சென்னை மாகாணத்திலிருந்து ஏராளமான வரிப்பணம் மத்திய அரசாங்கத்துக்குப் போய்ச் சேருகையில், பணநெருக்கடி என்ற காரணம் கூறி, நம் நாட்டு முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை போடுவதென்றால், இதன் பொருள் என்ன? இங்குள்ள அமைச்சர்களின் பொறுப்பு, இங்கிருந்து வரிப் பணத்தை வாங்கி வடநாட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு, அவ்வடநாட்டவர்கள் கூறும் செய்தியை நம்மிடம் அறிவிக்கும் தபால் இலாக்காவேலைதானோ!

மேலும், கல்வி அமைச்சர் மாதவமேனன், சென்னை பச்சையப்பாக்ஷத்தில், ஆசிரியர்கள் சங்க ஆண்டு விழாவில் பேசுகையில், "பள்ளிக்கூட ஆசிரியர்களின் எழ்மை நிலை பற்றி எனக்குத் தெரியும். அவர்களுடைய குடும்பக் கஷ்டங்களை நான் அறிவேன். அவர்களுடைய சம்பளக் குறைபாட்டை நான் அறிவேன். பணம் கொடுக்கவேண்டுமென்று விருப்பந்தான்—ஆனால பணத்திற்குஎங்குபோவது? எனவே சேவாஉணர்ச்சியுடன் ஆசிரியர்கள் வேலைசெய்யவேண்டும்" என்று கூறிவிட்டார்.

இந்த சேவா உணர்ச்சி, குடும்பத்தைக் கண்காணிக்கும் பொறுப்பைச் சரிவர நிர்வகிக்க முடியாமல், தனிக் குடும்ப வாழ்க்கை பற்றியே சதா கவலை கொண்டு, அதனால் தேக நிலை குன்றி, வாழும் ஆசிரியனுக்கு இருக்க வேண்டுமென்று அறிவூட்ட வந்த கல்வியமைச்சர் அதே சேவா உணர்ச்சி, தம்மிடமும், தம்சகா அமைச்சர்களிடமும், தம் கட்சியின் பெயரால் சட்டசபையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் சட்டசபை அங்கத்தினர்களிடமும், தம் கட்சியைச் சேர்ந்த பிற பெரிய சம்பளத் தொகைகளை வாங்கும் அலுவலாளர்களிடத்தும், தம் பெரிய கட்சியிலுள்ள பணக்காரர்களிடத்தும் மருந்துக்கேனும் சிறு அளவு காணப்படுகிறதா என்று கேட்கின்றோம். அம்சேவா உணர்ச்சி உடையவர்களே நாங்கள் என்று கல்வியமைச்சர் துணிவுடன் கூற முன் வருவாரானால், தங்கள் சம்பளங்களையெல்லாம், நாட்டின் பொருளாதார நெருக்கடி தீரும்வரையில் வாங்குவதில்லையென்று தீர்ந்தித் கொண்டு, அந்தத் தொகைகளைப் பங்கிட்டு ஆசிரியர்களுக்கு அளிப்பதென்றாலும், ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுடைய குடும்பங்கள் பட்டினிக் கொடுமையினின்று விடுதலையடைந்துவிடுமே.

எனவே, சேவா உணர்ச்சியிலிருக்க வேண்டும்! வயிற்றுக் குணவு போதவில்லையென்று கேட்கும் ஆசிரியர்களுக்கா? உல்லாச வாழ்வு நடத்தும் அமைச்சர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்குமா?

வர்க்கத்துக்கோர் வட்டாரம் தேவை

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே சிறந்த வழி

பண்டிதர் தரும் மருந்து பண்டிதருக்கே அர்ப்பணம்!

"மனித வாழ்க்கை வித்தியாசங்கள் உள்ளது. எனவே, ராணுவம் போல் கட்டுப்பாடு செய்து கட்டாயப் படுத்துவதன் மூலம் மனித வாழ்க்கை ஒரே மாதிரியாக இருப்பதைவிட வேற்றுமைகள் இருப்பதையே நான் விரும்புவேன்"

என்று இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அவர்கள், சான்பிரான்ஸிஸ்கோவில் பேசியிருக்கிறார். அதாவது, வேற்றுமையில் ஒற்றுமை காண்கிறார் பண்டிதர். மனித வாழ்க்கை வித்தியாசம் உடையது; ஆகவே எல்லோரையும் ஒரே கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பது இயலாத காரியம் என்கிறார். பண்டிதரின் இந்தக்கருத்தை நாம் வரவேற்கிறோம். உலகம் பல இன, பல கலாச்சாரங்களைக் கொண்டது. ஆகவேதான் ஆட்சி முறையில் மக்களை ஒரேபட்டியலில் அடைத்து வைக்காமல்; இன, கலாச்சார அடிப்படையில் நாடுகளைப் பிரித்து, வர்க்கத்துக்கோர் வட்டாரம் அமைக்க வேண்டும் என்று நாம் பல ஆண்டுகளாகக் கூறிவருகிறோம்.

வர்க்கத்துக்கோர் வட்டாரம் அமைத்து, அந்தந்த வர்க்கத்தினரின் பொருளாதாரம் அயலாரால் எந்த வழியிலும் சுரண்டப்படாமல் பாதுகாத்துக் கொள்ளும்படி செய்யும் அரசியல் முறை அமைந்தாலொழிய உலகில் அமைதி நிலவ மார்க்கமில்லை என்பது நமது எண்ணம். இந்த எண்ணத்தை அடிப்படையாக வைத்தே இந்தியத் துணைக்கண்டம் ஆரியநாடு-திராவிட நாடு என்ற சரித்திர, கலாச்சார, அனுபவ உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று வாதாடுகிறோம். எமது இந்த வாதத்தில் உண்மை, நீதி, நேர்மை கலந்துள்ளன. இதில்எத்தகைய துவேஷமோ சுயநலமோ கிடையாது. பண்டிதர் விரும்புவது போலவே நாமும் வேற்றுமையில் ஒற்றுமை காண விழைகிறோம்.

இந்துஸ்தானத்தோடு திராவிடநாடு இன்று அன்பு முறையில் இணைக்கப்படவில்லை. அதிகாரத்தின் மூலமே பிணைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டாய பிணைப்பின்காரணமாக திராவிடநாடு இந்துஸ்தானத்தினால் சுரண்டப்படுகிறது. இதன் காரணமாக வடக்குக்கும் தெற்குக்கும் வேற்றுமைதான் விளையக் காண்கின்றோமே யன்றி ஒற்றுமையை விளைவிக்கக் காணோம்.

எனவே பண்டிதர் தரும் அதே மருந்தைத்தான் நாமும் நாடாள்வோருக்குத் தர விரும்புகிறோம். 'இராணுவம்போல் கட்டுப்படுத்துவதன் மூலம் ஒற்றுமை காண முடியாது' என்பது பண்டிதர் கருத்து. பண்டிதர் சர்வதேச அடிப்படையில் பரந்த நோக்கத்தோடு இப்படிப் பேசியிருக்கிறார் என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் அந்த பரந்த மனப்பான்மை இந்தியாவைப் பொறுத்தவரைக்கும் எப்படி குறுகியதாகிவிடும் என்பதுதான் நமது கேள்வி. இந்தியா ஒரு துணைக்கண்டம், பல இனம், பல மதம், பலவிதக் கலாச்சாரங்களைக் கொண்டதொரு பரந்த பூபாகம். பரப்பளவில் ஏறக்குறைய ஐரோப்பாவை ஒத்தது. இது இனநூல், சரித்திரம் முதலிய பயின்ற பண்டிதருக்குத் தெரியாத விஷயமல்ல. மேலும் மேனாட்டு கற்றும் மேதை அவர். அப்படிப்பட்டவருக்குத் திராவிட நாட்டுப்பிரிவினையின் அவசியத்தை மேலும் நாம வலியுறுத்த வேண்டியதில்லை. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே திராவிட நாட்டுப்பிரிவினையில் அடங்கியிருக்கும் உண்மை என்பதை அவருக்கும், ஆட்சியாளருக்கும் சுட்டிக் காட்டுகிறோம். ஊருக்கு உபதேசம் செய்யும் இந்த உத்தமர்கள் இந்த உண்மையைத்தெரிந்து கொள்ளுவார்களாக.

திருவொற்றியூரில் தி. மு. கழகத் துவக்க விழா

ஆர்வம் நிறைந்த மக்கள் கூட்டம்: உணர்ச்சிவெள்ளம் கரை புரண்டது!

பல்லாயிரவர் மத்தியில் அண்ணாத்துரை சொற்பெருக்கு

பழங்கதை பேசிப் பயனில்லை; பணி புரியவாரீர்

—மணிமொழியார்

எதையும் தாங்கும்இதயம்கொண்ட எண்ணற்றோர் இங்குண்டு

—மதியழகன்

3-11-49 மாலை 6-மணிக்குச் சென்னைக்கடுத்த திருவொற்றியூர் சன்னதித் தெருவில் திருவொற்றியூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் டி. ஷண்முகம் அவர்கள் தலைமைவகித்தார்.

மாலை 4-மணியிலிருந்தே திரள் திரளாக மககள் வந்து கூடிவிட்டனர். திருவொற்றியூரைச் சுற்றியுள்ள பற்பல பகுதிகளிலிருந்தும பெருவாரியான மக்கள் கூட்டம் கூட்டமாக வந்திருந்து விழாவைக் கவனித்தனர். குறிப்பாக தியாகராயபுரம, காலாடிப பேட்டை, காசிமேடு, கத்திவாக்கம், இரணூர், சேக்காடு, பொன்னேரி, மீஞ்சூர் சாத்துமாநகர் முதலிய ஊர்களிலிருந்தும், சென்னையின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்தனர்.

விழா, சன்னதித் தெருவில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரமான பந்தலில் துவங்கியது. தோழர்கள் சீர்திருத்தப் பாடல்கள் பாடினர். மக்கள் தெருகோடி வரையும நிரம்பிநின்று, தெருவின் நாலா பக்கங்களிலும், இருமருங்கிலுமிருந்த வீடுகளின் வாயில், திண்ணைகளிலுங்கூட மிகமிக நெருக்கமாக நின்றுகொண்டிருந்தனர். கூட்டத்திற்கு மிகச் சிறந்த முறையில் சென்னைச் சந்திரா ரேடியோ சர்வீசாரால் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது திருவொற்றியூர் தி. மு. க. செயலாளர் தோழர் கண்ணன் முன்மொழிய, உதவிச் செயலாளர் தோழர் ஜகநாதன் வழிமொழிய தோழர் டி. சண்முகம் கூட்டத்திற்குத்தலைமை தாங்கினர்.

டி. சண்முகம்

தோழர் டி. சண்முகம் அவர்கள் தமது முன்னுரையில், நாட்டில் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றவேண்டியதற்கான காரணங்களை மிகவும் விளக்கமாக எடுத்துரைத்தார். அடுத்து ஆட்சியாளர் நாட்டு மக்களுக்கு வேண்டிய தேவைகளைச் சரிவர கவனித்து ஆவன செய்ய வேண்டும என்று எடுத்துக்கூறினர்,

காஞ்சி. மணிமொழியார்

பின்னர் "போர்வாள்" ஆசிரியர் தோழர் காஞ்சி. மணிமொழியார் பேசினர். அவர் பேசுகையில், இக் கூட்டமானது நான்கு மாதங்களுக்கு முன்னரே திராவிடர் கழகத்தின் பேரால் நடக்க இருந்தது என்றும், ஆனல் அடாத மழையின்காரணமாக நடைபெறுதுபோய் இன்று திராவிட முன்னேற்றக கழகத் துவக்கவிழாவாக நடைபெறுகிறது என்றும் குறிப்பிட்டுவிட்டு, அதற்கான காரணங்களை விளக்கினர் நாட்டிலே இன்று ஆளவந்தாரின் அடக்குமுறை தலைவிரித்து ஆடுகிறது என்றும், ஆட்சியாளரால் மககள் தேவையைப் பூர்த்திசெய்ய முடியவில்லை என்றும், அதற்கான மாறுதலை. மக்களை வாழவைக்கும் பணிபுரியவேண்டிய நேரத்திலே, நாம் பழங்கதைப்பேசிப பயனில்லை, நம்முள் துரோகத்தின் வரலாறு தீட்டப்பட வேண்டிய நேரமுமல்ல இது என்றும், நாம் திராவிடர் சமுதாயத்தின் வாழ்வை வளமாக்கும் பணியில் முனைந்து முன்னேறிச் செல்வோம் என்றும் சுட்டிக்காட்டினர்.

சர்க்கார்எதற்கெடுத்தாலும் பணமில்லை, பணமில்லை!என்ற பல்லவியையே படிக்கொண்டிருப்பதானது பண்புள்ள செயல் அல்ல, பணம் இருக்குமிடந்தேடி எடுப் தறகும, வாங்குவதற்கும்தாக்கம,பயமதான் காரணம என்றும் பேசினர்.

ஏன், இதோ இருக்கிறரே நமது அப்பன், திருவொற்றியூரான்.அவரிடம் பணம் இல்லையா! என்ன? கேட்டால் மக்களை வாழவைக்கக் கேட்டால் மறுத்தாவிடுவார்? மறுக்கவே மாட்டார். அதுபோலவே திருப்பதி வெங்கடாஜலபதி சிரங்கநாதர், மதுரை மீனாட்சி முதலியோரும் நல்ல பணம் படைத்தவர்களே. அவர்களும மககளின் மனக் கஷ்டத்தை அறியாதவர்களா! என்ன? கேட்பதில்லை, கேட்க மனமில்லை, அந்த மனப்போக்கு மனப்பான்மை வேண்டும மக்களுக்காகவே ஆண்டவன், ஆண்டவனின் சொத்துக்கதி என்ற நிலைமையைஏற்படுத்தி, மக்களை மக்களாகவே வாழவைக்கத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது-அதற்காக நமது, உடல் உயிர், உழைப்பு அத்தனையையும் அர்ப்பணிக்கத் தயார். என்று உறுதிக்கூறித் தமது பேச்சை முடித்துக் கொண்டார்.

கே. ஏ. மதியழகன்

பின்னர் மாணவர் கழகத் தலைவர் தோழர் கே. ஏ. மதியழகன் பேசினர். அவர் தமது பேச்சின் துவக்கத்தில், பெரியார் திருமணத்தால் எற்பட்ட மாறுதல்களைக் குறிப்பிட்டுவிட்டு, இப்போது 'நாம்திராவிட முன்னேற்றக் கழகத்தின் கீழ் வேலை செய்கிறோம். மக்கள் வாழ்வு சீர்குலைந்து கிடக்கிறது. அதனை மாற்றியமைக்க வேண்டும். மக்கள் மக்களாக வாழ வழி வகுக்கவேண்டும். வாழ்வில் வளம், ஒரு மறுமலர்ச்சி, ஏற்படுத்தவேண்டும் என்று பாடுபடுகிறோம். அதற்காகவேதான் பல வாலிபர்கள் இதில் சேர்ந்து உழைத்து வருகிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

பிரதமர் பண்டிதநேருஅவர்களின் அமெரிக்கப் பிரயாணத்தைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், "பண்டிதர்நேரு அமெரிக்கா செல்வது நமது நாட்டுக்குப் பெருமைதரும் சேதிதான். என்றாலும் அவரது பவனியின் முடிவாக, விளைவாக நாம், நம்நாட்டினர் அடையப் போகும் நன்மை என்ன என்பதைப்பற்றித்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அமெரிக்கா உலகிலேயே மிக மிகப் பெரிய பணக்காரநாடு. அது நேருவை தன் நிழலில், ஆதரவில் தட்டிக் கொடுத்து ரஷ்யாவுக்கு எதிராக, பொது உடைமைக்கு எதிராக, தன்னுடைய, பண ஆதிக்கத்திற்கு ஆதரவாக்கிக் கொள்ளத்தான் இத்தகைய திட்டமிட்டு, ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறது. நேரு போய் வருவதன் பலன் இதுதானு? இன்று நாட்டிலே காண்பது என்ன? நடைபெறுவதுஎன்ன ஏழைப் பாட்டாளி பட்டினியால் பதை பதைக்கிறன், நடுத்தர வகுப்பினர் மட்டுமென்ன? வாழ்வில் எந்த சுகத்தைக் காண முடிகிறது. மக்கள் வாழ்வில் வளமா இருக்கிறது? அவர்கள் முகத்தில் புன்னகையா பூத்துக் குலுங்குகிறது? மகிழ்ச்சியா தாண்டவமாடுகிறது? சுகம் எங்கே, எங்கேயிருககிறது. "இல்லை, இல்லை எதுவும் இல்லை வாழ்க்கை நடத்த" என்ற ஓலம் எங்கும். பாட்டாளி பட்டினியால் பரிதவிக்கிறன், விலைவாசி ஏறிக் கொண்டே போகிறது; அரிசி இல்லை, சர்க்கரை இல்லை, ரவை இல்லை இன்னும எத்தனையோ சீர்கேடுகள சிக்கல்கள் மலிந்து கிடக்கின்றன இன்று நாட்டிலே. இதையெல்லாம் கவனிக்கவில்லை ஆதிக்கத்திலிருப்போர் இதையெல்லாம எடுத்துக் கூறும கூட்டத்தாருக்குத் தடையுத்தரவு. பேசாதே போடு 144 பத்திரிகையா? ஜாமீன் கேள், அச்சகமா? கொடு ஆயிரம் ருபாய. புத்தகமா! பறிமுதல் செய், என்று அடக்குமுறை வீசுகின்றனர். நாம் நமது நாட்டுமக்களின் தேவையை பூர்த்தி செய்தாக வேண்டும், அதற்கான பணிபுரியத்தான் வேண்டும் அதற்காகமக்களைத் தயார் செய்ய வேண்டும், அறிவுப் பிரசாரம் அதிகமாக நடக்க வேண்டும். அதற்கெதிராக வீசும் அடக்குமுறைகளை, தரும் அல்லல்களை, போடும் தடை யுத்தரவுகளை; மற்ற எதையும் தாங்கும் இதயம பெற்ற வாலிப வீரர்கள் பலர் உள்ளனர், தி. மு. கழகத்தில். இன்னும் தேவை, சேருங்கள், சேருங்கள்! மக்களின் நலனுக்கான பணிபுரியத் தொடங்குவோம்" என்று வாலிபர்களை வரவேற்று, தன் பேச்சை முடித்துக்கொண்டார்.

பின்னர் தோழர் அண்ணாத்துரையவர்கள் நீண்டதொரு சொற்பொழிவாற்றினர். அதன் முழு விவரம் பின்னர் வரும்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

6-11-49

பொள்ளாச்சி :—	(மாலை 6-மணி) சி. என். அண்ணாத்துரை, பி. பழனிச்சாமி, எஸ். வி. லிங்கம், ஈ. வெ. கி. சம்பத்
ஆனைமலை :—	(இரவு 9-மணி) சி. என். அண்ணாத்துரை, எஸ். வி.லிங்கம், ஈ. வெ. கி. சம்பத்
திருவள்ளூர் :—	இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. கல்யாணசுந்தரம்
மதுரை :—	என். எஸ். இளங்கோ, எம். அய்யாசாமி, எஸ். முத்து
புரசைபாக்கம் (சென்னை):—	க. அன்பழகன், கே. ஏ மதியழகன், கே. கோவிந்தசாமி, டி.எஸ், வேலன்
பொன்னிறை :—	ஏ. வி. பி. ஆசைத்தம்பி, டி. கே. சீனிவாசன்
முத்துப்பேட்டை:—	என். வி. நடராசன்

7-11-49

திருப்பூர் :—	(காலை-நஞ்சப்பாஉயர்நிலைப்பள்ளி,) சி. என். அண்ணாத்துரை
கோவை :—	(மாலை-கல்லூரி ஆங்கிலப்பேரவை) சி. என். அண்ணாதுரை
சென்னிமலை :—	இரவு 7-30-மணிக்கு சி. என். அண்ணாத்துரை, ஈ. வெ. கி. சம்பத்
பேராவூரணி :—	ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன். என். எஸ். இளங்கோ

8-11-49

ஈரோடு :—	சி. என். அண்ணாத்துரை. பி. பழனிச்சாமி, எஸ். அபபாவு

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறு கள். சந்தா எண் குறிக்காமல் எழுதினல் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர், 'மாலைமணி'

பின் எதற்குத்தான் பணம் இருக்கிறது!

மக்கள் நலம் எதற்குமே பணமில்லை என்ற பாட்டுத்தானு!

சென்னை வியாசர்பாடி குஷ்டரோக சிகிச்சை விடுதி, "ஹோப் லாட்ஜ்" அபிவிருத்தி, தண்டையார்பேட்டை தொத்து நோய் ஆஸ்பத்திரி அபிவிருத்தி, கான்ரன்ஸ்மித் நகரில் மேகரோக சிகிச்சை விடுதி கட்டுதல், கீழ்ப்பாக்கம் தண்ணீர் இலாக்காவில் இயந்திர வடி கட்டிகளை அமைக்கும் திட்டம் இவ்வளவுக்கும் அரசாங்கத்திடம் பணமில்லாத படியால், சென்னை நகராண்மைக் கழகத்திற்குப் பணம் தர முடியாதென்று மறுக்கப்பட்டு விட்டது. ஆகவே, இன்றுள்ள சென்னை அரசாங்கம், பொது நலத்திட்டம எதுவாயினும் சரி அதற்கும் "பணமில்லை", "பணமில்லை" என்ற பாட்டுப்பாடுவதைத் தவிர வேறெதுவும் அறிவதில்லை இத்தகைய முக்கியமான திட்டங்களுக்கெல்லாம பணமில்லை என்று கூறினல், பின் எதற்குத்தான் பணமிருக்கிறது என்பதும் தெரிய வில்லை. வசூலாகும் வரிப்பணமெல்லாம், புதிது புதிதாகப் போடப்பட்ட—போடப்படும் வரிப்பணமெல்லாம் மக்கள் நலனுக்கல்லாமல் வேறு எதற்குச் செலவாகின்றனவோ! மத்திய அரசாங்கத்தார்க்கு அளிக்கப்படும் வரிப் பணத்தில் இவ்வளவு தந்தாக வேண்டும என்றுகேட்புறுத்திக்கேட்கும் உரிமையும் துணிவும் நம் அமைச்சர்களுக்கு இல்லை போலும்! வசூலாகும் வரிப்பணமெல்லாம் மத்திய அரசாங்கத்தாரிடம் அடைக்கலம் புகுந்தால், நம் நாடு பணமில்லா பஞ்சத்தில் அவதிப்படுவதைவிட வேறு என்னாகும்?

மக்கள் குரலை மதியா ஆட்சி வீழ்ச்சியுறுதல் ஒருதலை

கல்லிடைக்குறிச்சியில் முன்னேற்றக் கழகத் தோழர்கள் முழக்கம்

அம்பாசமுத்திரம், அக். 30—

18—10—49 அன்று கல்லிடைக்குறிச்சியில் தி. மு. க. துவக்கவிழா சிறப்பாக நடந்தேறியது.

மாலை 6 மணிக்குத் தோழர் ஏ. சோமசுந்தரம் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. மாணவத் தோழர் அ. இளந்திரையன் தி. மு. க. தோற்றத்தின் அவசியம் பற்றியும், வளரும் நிலைமையிலுள்ள இக்கழகத்தை யாவரும் ஆதரிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டும், அதன் கொள்கைகளைப் பற்றியும் விளக்கமாகப் பேசினார்.

காஞ்சி கலியாணசுந்தரம்

பின்னர் தோழர் காஞ்சி. கலியாணசுந்தரம் பலத்த கரகோஷத்துக்கிடையே தனது சொற்பொழிவை ஆரம்பித்தார். ஜனநாயகத்தின் அடிப்படையில் எழுந்ததுதான் தி. மு. கழகம் என்றும், அது நாட்டுக்குப் புரியவேண்டிய பணி மிக அதிகமாக உள்ளது என்றும், நாடும் அதை எதிர்பார்க்கிறது எனவும், அரசியல், பொருளியல், சமுதாய இயல் முதலியவற்றில் நலிந்து கொண்டுவரும் திராவிடத்தை அதனின்றும் மீட்டு, அதைச் சிறந்ததொரு சமதர்ம நாடாக்குவதுதான் கழகத்தின் குறிக்கோள் எனவும் விளக்கமாகப் பேசினார்கள்.

சாவு அல்லது தற்கொலை என்ற நிலையிலிருக்கும் நெசவாளர்களை அரசாங்கம் உடனடியாகக் கவனிக்கவேண்டும் என்றும் அவர்களின் நிலையை உயர்த்தப் பாடுபடவேண்டும் என வற்புறுத்திப் பேசினார். அவர்களது கோரிக்கைகளை ஏற்க மறுக்கும் அரசாங்கம் வீழ்ச்சியுறும் எனவும் கூறினார்.

''உற்பத்தியைப்பெருக்குக'' எனக் கதறிப் பயனில்லை. ''உழைப்பவனுக்கு நிலம் சொந்தம்'' ஆனால்தான், உற்பத்தி பெருகும் என்றும் வலியுறுத்தி கூறினார். இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்ட 'மாலைமணி' கருத்திதழைக் கண்டு கிலி கொண்ட சர்க்காரின் அச்சக ஜாமீன் கெடுபிடிகளைப் பற்றியும் விவரமாகப் பேசி முடித்தார்.

பின்னர் பேசிய தூத்துக்குடித் தோழர் நடராசன் தி. மு. க. கொள்கைகளைப் பற்றியும், ஏன் தனிக் கழகம் அமைக்கவேண்டியது என்பது பற்றியும், அதற்கு மாணவர், தொழிலாளர், மக்கள் ஆதரவு தரவேண்டும் எனவும் கூறினார்.

தீர்மானங்கள்

கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. சாவு அல்லது தற்கொலையைத் தவிர வேறு வழியின்றி தவிக்கும் நெசவாளர்களை அதனின்றும் மீட்டு அவர்களின் நிலையை உயர்த்த உடனடியாக ஆவன செய்யுமாறு அரசாங்கத்தை தி. மு. க. கேட்டுக்கொள்கிறது.

2. இவ்வூர் ஹரிஜன ஹாஸ்டலுக்காக சர்க்காரிடம் சுமார் 10 ஆயிரம் ரூபாய் கிராண்ட் பெற்றும் நிர்வாகம் சரியில்லாது இருந்துவருவதை தி. மு. க. வன்மையாகக் கண்டிப்பதுடன், அரசாங்கத்தை இதை குறித்து கவனித்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

அரசியல் ஒழுக்கம்!

"சென்னை நகரம் தங்களுக்குக் கிடைக்காவிட்டாலும் அதைத் தனியாக்கியாவது விடுவது என்று இன்னும் யாராவது முயற்சிப்பதானால் அது பலிக்காத காரியம் என்பது மாத்திரமல்ல, காங்கிரசின் நியாயமான முடிவிற்கே விரோதமான செய்கை.''

'சென்னை நகரம் தமிழ் நாட்டைச் சேர்ந்ததே என்ற முடிவு செய்த மூவர் கமிட்டியில் ஒருவரான டாக்டர் பட்டாபி சென்னை நகரத்தையும் அதை அடுத்த ஊர்களையும் சேர்த்துத் தனிமாகாணமாக்கலாம் என்று ஒரு யோசனையை இப்பொழுது கூற புறப்பட்டிருப்பதுதான் யோக்கியமான செய்கை அல்ல. அவர் வகிக்கும் ராஷ்டர பதியின் பதவிக்கு இது அழகன்று.''

"ராஷ்டரபதியாக இருந்துகொண்டே மூவர் கமிட்டியின் முடிவுக்கும், காரிய கமிட்டியின் தீர்மானத்திற்கும் விரோதமாக பட்டாபி அடிக்கும் பல்டியை யாரும் பொருக்கவே முடியாது."

— தினசரி —

இந்தியாவில் காலராப் பிரச்னைகள்

உலக சுகாதார அமைப்பின் அக்கரை

பாரிஸில் சர்வதேசப் பொது சுகாதார டைரெக்டர் டாக்டர் பௌரிஸ் கௌட் பிரஞ்சு அயல் நாட்டுப்பிரதேச இலாகா பொது சுகாதார டைரெக்டர் டாக்டர் மொர்சர் வௌசெல், உலக சுகாதார அமைப்பைச் சேர்ந்த டாக்டர் டி. எம். கௌல் ஆகியோர் மூவரும் சென்னைக்கு வருகைதந்து தஞ்சை மாவட்டத்தில் காலரா பற்றிய பிரச்சினைகளை ஆய்வரென்று தெரிகிறது.

இம் மூப்பெரும் வல்லுநர்களும் உலக சுகாதார அமைப்பின (டபுள்யூ. எச். ஓ.) சார்பிலேயே இவ்வாய்வு வேலையினைத் துவக்கியுள்ளனர். இவர்கள் இதற்கு முன்பு பல பாகிலும் தங்களது இப்பணியை மேற்கொண்டு நடத்தியுள்ளனர்.

இவர்கள் இறுதியாக கிழக்கு பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டு, ஜினிவா திரும்பி, இந்தியாவில் காலராப்பிரச்சினைகளைப் பற்றிய தங்களது அறிக்கையை உலக சுகாதார அமைப்பிடம் முன்வைப்பர்.

நவம்பர் 14, 15, 16-ம் நாட்களில் இவ் வல்லுநர்கள் டெல்லியில் அனைத்திந்தியப் பெரும் டாக்டர்களை சந்தித்து காலராப் பிரச்சினை தீரப்பதற்கான வழிவகைகளையெல்லாம் விவாதிப்பர்.

வேதகாலம் திரும்புகிறது!

வானொலியில் சமஸ்கிருத நிகழ்ச்சிகள்?

திருச்சி சமஸ்கிருத சாஹித்ய பரிக்ஷத்தின் சார்பில் தூதுக்குழு ஒன்று கல்வி மந்திரி தோழர் மாதவமேனனைக் கண்டு பற்பல கோரியிருப்பதோடு, அதில் அற்பக் கோரிக்கை யொன்றினையும் நீட்டியிருக்கிறது. மாதவ மேனனை நன்கு உணர்ந்திருக்கிறது தூதுகோஷ்டி என்பதைத் தவிர, அக்கோரிக்கையில் அர்த்தமோ அவசியமோ நடைமுறைக்கேற்றதோ இருப்பதாகத் தோன்றவில்லை. சல்லடங்கட்டிக் கொண்டு, செத்த மொழிக்குச் 'சப்பைக்கட்டு' கட்டிவரும் மாதவமேனனார் போன்றோரால் தான் இதனை செவிசாய்த்தும் கேட்கமுடியும்; இதர பிற கேட்ட அளவில் எள்ளி நகையாடியே தீருவர்; நம்க்கும் குறும்பும்மிக்கதெனத் தூ விலக்குவர்.

அனைத்திந்திய வானொலி நிலையத்தின் பொது—கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் சமஸ்கிருதத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே தூதுக்குழுவின் முக்கிய கோரிக்கை.

மந்திரி மாதவமேனனார் பொறுமையுடன் கேட்டிருந்து, கவனிப்பதாகவும் வாக்களித்தாராம்.

தூதுக்குழுவினரின் கோரிக்கை எவ்வளவுதூரம் நடைமுறைக்கொத்துவருவது நாட்டவர்க்கேற்றது என்பவை ஒருமுறை இருக்க, அவர்களின் கோரிக்கை தத்துவத்தை நாம் அலசிப்பார்க்கவேண்டும். அனைத்திந்திய வானொலி நிலையம் இப்போது ஒரு கட்சியாரின்—ஆளுங்கட்சியாரின் ஒலிபெருக்கிய பிரசார அங்கமாக இருந்து வருவதோடு ஒரு குறிப்பிட்ட வகுப்பாரின் ஏகபோக ஆதிக்கத்துக்கு மட்டுமே பயன்பட்டு வருகிறது. அனைத்திந்திய வானொலியின் அனைத்துப் பயனையும் ஒரு வர்க்கமே உறிஞ்சி வருகிறது. இது நாடறிந்த, அக்கிலிய 'தந்தாவேஜுகள்' அறிவிக்கும் உண்மையாகும். இது போதவில்லை, இந்தூது குழுவினர்க்கு. "இந்தப் பட்டிகளுக்கு இங்கு இடம் இல்லை என்ற நிலையே மட்டும் விட்டுவிடக் கூடாது. இங்கு என்ன நடக்கிறதென்பதும் இப்பசங்களுக்குத் தெரியக்கூடாது "என்ற எண்ணத்தை உள்ளடக்கி சமஸ்கிருதத்தில் வானொலி நிகழ்ச்சிகள் இருக்கவேண்டுமென 'வரம்' கேட்டு, வற்புறுத்தியுள்ளனர்.

நாம் உணர்ந்திருக்கிறோம், வேதத்தில் தங்களுக்கு ஏற்றம் தந்துவைத்துக் கொண்டு, மாற்றாரை (இக்காட்டவரை) இழிவு பேசி இறக்கம் கடனோத்து சமஸ்கிருதம் துணைகொண்டு அன்று வேதம் படைத்தனரென்று அர்த்தப்புத்தி இன்னும் போகவில்லை. சாறுங் கோரமாகவேத் தாண்டவமாடக் காண்கின்றோம் இத்தூதுக்குழுவின் மூலம்.

நாட்டு நிவாசம் அவர்கள் கையில்; எல்லாக் காரியங்களுக்கும் என்ன நடப்பார் கை. பிள்ளைகள்; நடக்கட்டும்!

விளம்பரம்

ஒருபத்தி ஒருஅங்குலம் ரூ5—0—0

நீண்ட கால ஒப்பந்தவிளம்பரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

—மானேஜர்

இனி நடப்பவை

விருத்தாசலம்— தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. கிளையின் செயற்குழுக்கூட்டம் 8-11-49 அன்று, 'குள்ளஞ்சாவடி'' தோழர் தி. இராசன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். ஆலோசிக்க வேண்டிய பொருள்:—தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்களைக் கொண்டு வட்டந்தோறும் பொதுக்கூட்டம் நடத்துவது. சி. என். தலைமையில் மாவட்டமாநாடு நடத்துவது, எனத்தோழர் சி. முனுசாமி அறிவிக்கிறார்.

* * *

பொள்ளாச்சி— இவ்வூர் தி. மு. கழகக்கிளையின் துவக்க விழாப் பொதுக்கூட்டம் 6-11-49 ஞாயிறு மாலை 6 30 மணிக்கு இவ்வூர் தேர் நிலை வெளியில் நடைபெறும். அதுபோது தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் தலைமையில் தோழர் சி. என் அண்ணாத்துரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை—சென்னை, புரசைவாக்கம் தி. மு கழகக் கிளையின் துவக்கவிழா புரசை, அன்னதான சமாஜ மண்டபத்தில் 6-11-49 மாலை 5 மணிக்கு நடைபெறும். அதுபோது, தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ; கே ஏ. மதியழகன் பி ஏ; கே கோவிந்தசாமி, ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

* * *

முத்துப்பேட்டை-இவ்வூர் தி மு. கழகக் கிளையின் துவக்க விழா 6-11-49 மாலை 5 மணிக்கு நடைபெறும். அதுபோது. தோழர்கள் என் வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

மேலக்கல் கண்டார் கோட்டை (பொன்மலை)-6-11-49 ஞாயிறு 5 மணிக்கு இவ்வூர் தி. மு.க. அமைப்புக்கூட்டம் நடைபெறும் இடம்:- தோழர் முருகேசன் அவர்கள் இல்லம். தோழர் எ கோவிந்தசாமி தலைமை வகிப்பார். கழக அனுதாபிகளும், உறுப்பினர்களும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

மன்னார்குடி— இந்நகர் தி. மு.க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 6-11-49 ஞாயிறு மாலை 5 மணிக்கு, தோழர் நாராயணசாமி அவர்கள் இல்லத்தில் நடைபெறும் செயற்குழுவினர் அழைக்கப்படுகின்றனர்.

அறிவிப்பு

ஏஜண்டு தோழர்கள் அக்டோபர் மாதப் பட்டியல் தொகையை 8—11—49 க்குள் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அனுப்பத் தவறினால் முன் அறிவிப்பின்றி, பிரதிகள் அனுப்புவது, கண்டிப்பாய் நிறுத்தப் படும்.

மானேஜர் " மாலை மணி "

சந்தா [வெளி நாடு]

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வி. பி: மூலம் அனுப்ப இயலாது.

'கள்ளமார்க்கெட்'டார் இரகசிய இலாபக்காரரானர்

வேண்டாம், வீண் 'வார்த்தை அம்பு'!

"சென்னையில் சர்க்கரைக் கள்ள வர்த்தகம் நடப்பதை நிறுத்த வேண்டுமென்றால், கள்ள வர்த்தகம் செய்பவர்களில் ஒரு சிலரையாவது சென்னை சர்க்கார் உடனடியாகப் பிடித்துக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்'' என்று இந்தியக் கைத்தொழில் மந்திரி டாக்டர் ஷ்யாம் பிரசாத் முக்கர்ஜி சென்னை வந்திறங்கியதும் குறிப்பிட்டிருக்கிறார்.

சட்டத்தை நிறைவேற்ற மனமும், மார்க்கமும், வாய்ப்பும் வசதியும் நம் மந்திரிகளுக்கு உண்டோ இல்லையோ, வார்த்தைகளை அள்ளி வீசுவதில் மட்டும் அவர்கள் நிகர்! கள்ளமார்க்கெட்காரர்களைத் தூக்கிலிட வேண்டுமென்று அன்று கர்ஜித்தார் முதலமைச்சர் நேரு. ஆனால் இன்றோ...? சமூக விரோதிகளான அக்கொள்ளைக் கூட்டத்தை 'கள்ள மார்க்கெட்காரர்கள்' என்று கூறக்கூட அஞ்சி 'இரகசிய லாபக்காரர்கள்' என்று புதுப் பெயரிட்டு அழைக்கிறது நேரு சர்க்கார். அதுமட்டுமல்ல; 'இத்தகைய இரகசிய லாபக்காரர்கள் தாங்கள் சேர்த்த அதிகப்படி லாபத்தைத் தாங்களாகவே சர்க்காரிடம் கணக்குக் காட்டி ஒப்படைத்துவிட்டால் அவர்கள் மன்னிக்கப்பட்டு விடுவார்கள்' என்ற அளவுக்கு இன்று சர்க்கார் அறிக்கைகள் வெளி வருகின்றன.

எனவே, வேண்டாம் வெறும் வார்த்தை அம்புகள், உருப்படியாகச் செய்ய முடிந்ததை மட்டுமே 'உச்சரிக்கட்டும்' பொறுப்பும், திறமையும், நிரம்பப்பெற்றிருக்க வேண்டிய மந்திரிமார்!

கட்டைவிரல் போயின் கை இருக்கிறது— காமராஜர் உணரட்டும்!

அறிவுப் புரட்சியின் விளைவு தி. மு. கழகம்

தஞ்சையில் சிற்றரசு முழக்கம்

தஞ்சை நவ. 1—

30-10-49ல் தஞ்சை திலகர் கட்டடத்தில் நடந்த பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துத் தோழர் சி. பி. சிற்றரசு ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம்:—

"தாய்மார்களே! பெரியோர்களே! தோழர்களே! இந்தப் பழம் பெருமை வாய்ந்த தஞ்சையில் திராவிட முன்னேற்றக் கழகச்சார்பாக மூன்றாவது பொதுக்கூட்டம் கூடி, அதில் என்னைத் தலைமை வகிக்கப் பணித்தத்தோழர்களுக்கு என் நன்றி.

இலட்சியவாதி அழகிரி

அண்ணார் அழகிரி அவர்கள் இறந்த பிறகு, இன்றுதான் அவர் கல்லறையைப் பார்த்தேன். பலப்பல எண்ண அலைகள் என் இருதயக் கடலில் மோதின. ஈடு இணையற்ற இலட்சியவாதி அதன் காரணமாகவே அவர் தனது இறுதி மூச்சுவரை இலட்சியவாதியாக விளங்கினார் கொள்கையற்ற காதற்ற ஊசியாக அவர் இயக்கத்தில் இருக்கவில்லை. அவர் தமது வறுமை நிறைந்த வாழ்க்கையைக் கொள்கையை விற்று ஈடு செய்ய நினைத்திருந்தால், தன் இன்முகத்தைக் கொஞ்சம் தஞ்சை மிராசுதாரர்கள் பக்கம் திருப்பியிருந்திருக்க முடியும். வறுமைச் சுழலில் அகப்பட்டு, நோயெனும் சூராவளியால், அவரது வாழ்க்கை எனும் ஓடம், சுக்குநூறாகிப் போயிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

தி. மு. க. தோற்றம்

பணம், பதவி, பட்டம் சுகம் ஆகியவைகளை நாசமாக்கிக்கொண்டுதான், இலட்சியத்தை வளர்க்க முடியும். ஏனெனில், மிக இடர்ப்பட்ட நமது கொள்கைகளுக்கு இதுவரையில் இடையூறாயிருந்தவைகள் மேற்சொன்னவைகள்தான். பணம், பதவி, பட்டம், சுகம், ஆகியவைகளை ஒருபுறத்தில் நிறுத்தி வைத்துவிட்டு கொள்கையை வளர்க்கவேண்டும் என்பதன் இடையிலே ஏற்பட்ட அறிவுப்புரட்சியின் முடிவுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றம்.

பிரயாணம் தொடங்கி விட்டோம்

அதற்கிணங்க, இந்த அடிப்படையைக் கொண்டு நாமும் கொள்கையைக் காப்பாற்ற வேண்டுமே, நாளையும் நாம் இலட்சியவாதிகள் என்ற நற்பெயரோடு மக்கள் மத்தியில் நடமாட வேண்டுமே என்ற கவலையின் காரணமாகவே, ஓட்டை விழுந்த படகிலிருந்து தப்பி உன்னதமான படகில் பிரயாணத்தைத் துவக்கி இதுவரை 267 மைல்கள் பிரயாணம் செய்திருக்கின்றோம். (267 கழகங்கள்) நீந்தத் தெரிந்து, வேறுபடகு அமைக்கத் தெரிந்த காரணத்தால். இன்னும் சில நீந்தத்தெரியாத தோழர்கள், ஓட்டைப் படகிலிருந்து, தத்தளிக்கின்றார்கள். அவர்கள் விரும்பினால் நமது ஓடத்தை அவர்கள் பக்கம் செலுத்தி அவர்களையும் ஏற்றுக்கொள்ள இசைகின்றோம், ஏனெனில் நாமும் அவர்களும் புறப்பட்ட இடம் ஒன்று அவர்கள் போய்ச் சேர வேண்டிய இடம் திசைத் தப்பிப் போகக் கூடாதென்ற நல்ல எண்ணத்தால். ஆனால் நாம் இன்னும் போக வேண்டிய பிரயாணம் நெடுந் தொலைவு இருக்கிறது.

கூட்டு முயற்சியில் பணியாற்றுவோம்

இனி நாம் கண்டிப்பாக வழி தவற மாட்டோம், காரணம் என்னவென்றால்; மரக்கலத்தைச் செலுத்தும் பொறுப்பு நம் அனைவரிடத்திலேயும் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது.

தோழர் சி. பி. சிற்றரசு

திசை பார்க்க ஒருவர், காற்றின் வேகத்தை அறிய ஒருவர், கடலின் கொந்தளிப்பைக் கண்டு சொல்ல ஒருவர், சுக்கானைத் திருப்ப ஒருவர், சுறா மீனை வதைக்க ஒருவர், பாய் மரத்தை உயர்த்த ஒருவர், பகைவரின் படையெடுப்பைத் தடுக்க ஒருவர், கொலை நோக்கும் கண்ணாடியில் பார்க்க ஒருவர், பிரயாணிகளை ஏற்ற ஒருவர், பாதையறிந்து செலுத்த ஒருவர் ஆக அனைவரும் ஒரு வேலையை மேற்கொண்டு செல்கின்றோம்.

இதுவரை இந்த பொறுப்புகள் அவ்வளவும் ஒருவர் கையிலேயே ஒப்படைக்கப் பட்டிருந்தன. அதன் விளைவாகவே அவைகளுக்கு அபாயம் நெருங்கியது.

வேதனை மகிழ்ச்சியாகி விட்டது

மன வேதனையோடு வெளியேறினோம் என்பது பலருடைய கருத்து. அதுவும் உண்மைதான். ஆனாலும் இனி நாம் அதை மகிழ்ச்சியோடு வெளியேறினோம் என்று கொள்ள வேண்டும். ஏனெனில் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்து ஒழிக்காவிட்டாலும் நாம் இலட்சியவாதிகள் என்ற நற்பெயராகிலும் வருங்கால உலக வரலாற்றிலே பொறிக்கப்படும்.

காமராஜருக்கு எச்சரிக்கை

பிறகு தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவரை நினைவுபடுத்திப் பேசும் போது குறிப்பிட்டதாவது:—

"வேறு அரசாங்கமாயிருந்தால் திராவிடர் கழகத்தாருடைய கட்டை விரலை எடுத்துவிடும், நம்முடைய அரசாங்கம் ஆகையினால் சும்மா விட்டிருக்கின்றது" என்று சென்னையில்பேசுகின்றார் காமராஜர். பேனாவிலஎழுதவேண்டுமானால் தான் கட்டைவிரல் தேவையே தவிர குச்சியாலும், பிரஷாலும், எழுத வேண்டுமானால் கட்டைவிரல் தேவையில்லை என்பதைக் காமராசருக்கு எச்சரிக்கை செய்கின்றோம். வட நாட்டான் காலடியக்கம் கைகட்டிவாய் புதைத்து நிற்கும் கபோதித் தன்மையிலிருந்து விடுபட காமராஜர் இந்த வீரத்தைப் பயன் படுத்தினால் மிக்க நலமாயிருக்கும். அதை விட்டு 'விபீஷணன,' 'சுக்கிரீவன்' வேலையைத் தொடங்கினால் ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஆழ்வார், அடியார் என்ற பட்டம் கிடைக்குமேதவிர, அறிவு உலகத்தில் அவருக்குக்கிடைக்கப்போகும் பட்டம் 'ஐந்தாம் படை' என்பதுதான்.

ஆகவே வருங்கால அரசியல் தட்ப வெட்பங்களைச் சரியாக உணர்ந்து, ஒவ்வொன்றாக நமது மாகாண உரிமையைப்பறிக்கும் வடநாட்டு ஆதிபத்திய நிலையிலிருந்து தப்ப வழி காண அவர் முயல வேண்டியதே அறிவுடைமையாகும்" என்று கூறித் தன் முடிவுரையை முடித்தார். (5-நி)

மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக வேலைகள்

மாவட்டத் தோழர்கள் ஆலோசனை

(நமது நிருபர்)

ஈரோடு, அக். 31—

கோவை மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக வேலைகளை முழுமூச்சாகச் செய்வதற்கு, ஜில்லா முழுதும் கிளைகள் அமைத்து அங்கத்தினர்கள் சேர்ப்பது பற்றியும் ஒவ்வொரு தாலுக்காக்களிலும் தாலுக்கா மகாநாடுகள் கூட்டுவது பற்றியும் ஆலோசனை செய்வதற்காக மாவட்டப் பிரமுகர்கள் கூட்டம், 30—10—49ம் தேதி இரவு 11 மணிக்கு நடைபெற்றது. பெத்தாம் பாளையம் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர்கள் எஸ். ஆர். சுப்பிரமணியம் (திருப்பூர்) சென்னிமலைக் கழகச் செயலாளர், கொடுமுடி தோழர்கள், ஈரோடு எஸ். ஆர். சந்தானம், எ. சுந்தரய்யா, எஸ். அப்பாவு, ஆர். பெருமாள், என். இ. பாலகுரு, கோபி. ஜின்னாராஜு, ஆர். என். ரங்கராஜு, கே. ஜக்கிரியா, எம். பழனியப்பா ஆகிய பல தோழர்கள் வந்திருந்தார்கள்.

பல விஷயங்கள் பற்றி விவாதம் செய்து முடிவு செய்தனர். 6-11-49-ல் நடைபெறும் ஜில்லாக் கூட்டத்திற்குப் பின், ஜில்லா முழுதும் கழக வேலைகள் துவக்குவதென முடிவு செய்யப்பட்டது. பின் தோழர் கே. ஜக்கிரியா நன்றி கூறியபின் கூட்டம் கலைந்தது.

கழகத் தோழர்களுக்கு

உறுப்பினர் சேர்க்கும் சந்தா ரசீது புத்தகங்கள் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதால், உடனுக்குடன் மாவட்டங்களிலுள்ள அமைப்புக்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க முடியவில்லை. விரைவில் தேவையான அளவு புத்தகங்களை அனுப்பிவைக்கிறோம். பொறுத்தருள வேண்டுகிறேன்.

என். வி. நடராசன்,
செயலாளர்— தி. மு. க,
தலைமை நிலையம்.

பக்தருக்கு அய்யனாரின் அன்பளிப்பு!

அபராதம் ரூ. 30

வாலாபேட்டை, அக் 28—

குளித்தலைக்கு மேற்கில் 6 மைல் தூரத்திலுள்ள வாலாபேட்டையில் "அய்யனார் விலாஸ்" கடை சொந்தக்காரர் தமது ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆதித்திராவிடத்தோழர் ஒருவரை அடித்து வெளியே தள்ளிவிட்டார். பின் கோர்ட்டில் வழக்கு தொடர அந்த ஓட்டல் சொந்தக்காரருக்கு குளித்தலை சப்மாஜிஸ்ரேட் அவர்களால் ரூ. 30 அபராதம் விதிக்கப்பட்டது. ஓட்டல் சொந்தக்காரர் தான் இவ்வழக்கில் வெற்றி பெற்றால் இவ்வூர் அய்யனார் அப்பன் என்ற தெய்வத்திற்கு ஒரு ஆடு பலி கொடுப்பதாக பிரார்த்தனை செய்து வந்தனராம். எப்படி அய்யனார் அப்பனின் அன்பளிப்பு. (ஒ-நி)

An Opportunity For Engineering Students of Annamalai University

——(O)——

On the notification in the papers published that the Engineering Section will be reopened only on 16th January, 1950 instead of 24th of last month, several students have already applied for a Refresher Course in Automobile Engineering (Maintenance) allied with Mechanical, Electrical and Radio Engineering. To help the students in not wasting their time, it is decided to open this Fourth Special Eight Week's Vacational Course from the last week of November, 1949. The period of the practical work here may be counted by the University in deserving cases.

The applications will be considered according to serial order of receipt, which should reach here on or before the 11th instant. Students should come here for interview on the 14th instant and be prepared to join if they are selected. They must produce any records to identify that they are Engineering Students of the Annamalai University and also 3 copies of photoes with their signatures and home adresses and University adresses entered in the back. Immediately after selection they must pay a caution deposit of Rs. 100/- to the Association and a deposit of Rs. 100/- to the Hostel. If no payment is made, the seat will be given immediately to the next waiting student. No concession or time for payment is allowed.

The students who are involved in the recent strikes need not apply.

Whether selected or not, all the expenses will have to be borne by the student. No fee is charged; but no other scholarship, help or concession is available. Rules are very strict. Boarding and Lodging are limited. The quality of food and other conveniences and comforts are very ordinary. While food is standard, the accommodation charges will vary according to the places with higher charges. Such accommodations are very limited.

The Association cannot be held responsible for any loss or damage caused by accident or any other cause in the premises or outside during the course.

A few special seats for others can be provided on payment of a fee of Rs. 300/- for the course but for applicants who are in service, the fee is Rs. 1000/-.

Coimbatore, 3—11—49. (B. P.)

G. D. NAIDU,
President,
The Industrial Labour Welfare Association Ltd.,
Avanashi Road, Coimbatore.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

காரைக்குடி. நா. புதூர்— நகர உட்கிளை

காரைக்குடி, அக். 25— காரைக்குடியைச் சார்ந்த நா. புதூரில் தோழர் அ. ச. நடராசன் அவர்கள் தலைமையில் தி. மு. கழக அமைப்புக்கூட்டம் 22—10—49ல் நடந்தது. அதுபோது தோழர்கள் அ. சண்முகம், இராம. சுப்பையா ஆகியோர் பேசினர். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்-காரைக்குடி நகர. நா. புதூர் உட்கிளை" திறக்கப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:—எம். கணபதி; பொருள் உறுப்பினர்:—எஸ். ஆர். ஓ. ராசு; விளம்பர உறுப்பினர்:—அ. சண்முகம்; ஏனைய செயற்குழுவினர்:—டி. கிருஷ்ணசாமி, கே. வெள்ளியங்கிரி, ம. ஆவப்பன், அ. கிருஷ்ணசாமி. பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (செ-ர்)

• • •

சென்னை சூளைப்பட்டாளம் நகர உட்கிளை

சென்னை, அக். 30— இன்று காலை 10 மணிக்கு சென்னை, சூளை வாடியா பார்க்கில் தோழர் ஆர். டி. அரசு அவர்கள் முன்னிலையிலும், தோழர் ஆர். தோபதி அவர்கள் தலைமையிலும் ஓர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர சூளைப்பட்டாளம் உட்கிளை" திறக்கப்பட்டு, ஓர் புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வி. கே. வி. சாமி; துணைச் செயலாளர்:—ஆரோக்கியசாமி; பொருள் உறுப்பினர்:—தர்மலிங்கம்; விளம்பர உறுப்பினர்:—ஆர். தோபதி. ஏனைய செயலுறுப்பினர்கள்:—கே. வரதன், கணேசன், முருகேசன் வி. பாலகிருஷ்ணன், டி. நடேசவேல், பி. பெருமாள், கே. வாசுதேவன், லோகநாதன், கே. முனிரத்தினம், ஏ. ரத்தினம், எம். முனிசாமி. பின்பு தோழர் கே. வரதன் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

திராவிட முன்னேற்றக் கழகம்

★

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

❖

277

❖

* * *

மலையாண்டி பட்டணம்— சிற்றூர்க்கிளை

மலையாண்டிப்பட்டணம், அக். 30— உடுமலையை அடுத்த மலையாண்டிப் பட்டணத்தில் 29—10—49 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் மலையாண்டிப்பட்டணம் சிற்றூர்க்கிளை திறக்கப்பட்டது. புதிய செயற்குழு வொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— எம். வெள்ளைச்சாமி; பொருள் உறுப்பினர்:— எஸ். குமாரசாமி; விளம்பர உறுப்பினர்:—எம். வெங்கடாசலம். ஏனைய செயலுறுப்பினர்கள்:— எம் அப்பாவு, எம். மலையாண்டிசாமி, ஏ. ராமசாமி, எம். கருப்புசாமி, என். சுப்பிரமணியம். (வி-உ)

நாட்டு நடப்பு

அருப்புக் கோட்டை:— இவ்வூர் தியாகராயர் வாலிபர் சங்க ஆதரவில் தீபாவளி எதிர்ப்பு ஊர்வலமும், கூட்டமும் 21—10—49ல் நடைபெற்றது. தோழர் செ. சண்முகசுந்தரம் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகளில் சென்று டி சங்கத்திற்கு முன்பாக உள்ள திடலையடைந்தது. பின்னர், தோழர் எஸ். எஸ். கருப்பையா தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கியது. தோழர்கள் எஸ். சாமிமூர்த்தி, கே. இராமசாமி எம். எஸ். இராமசாமி ஆகியோர் "தீபாவளியும், திராவிடரும்" என்பது பற்றிப் பேசினர். பிறகு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. (ஓ-தி)

* * *

வாலாஜா பேட்டை:— இவ்வூர் சாரண்மைக் கழக உயர்நிலைப்பள்ளித்தமிழ்ப்பேரவையின் துவக்க விழாக்கூட்டம் 26-10-49 அன்று நடைபெற்றது. நகர் மன்றத் தலைவர், தோழர் பழனிவேலு பி.ஏ. அவர்கள் தலைமையில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் "மாணவரும் எதிர்காலமும்" என்பது பற்றிப் பேசினர். பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

• • •

திருச்சி:—இர்ஸ்கர் துய சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பில் "சமூக முன்னேற்றத்திற்கு சமதர்ம திட்டமே சிறந்தது" என்பது பற்றி ஓர் சொற்போர் நடந்தது. தோழர் அப்துல் ரசாக் பி. ஏ. தலைமை வகித்தார். தோழர்கள் மாதவன், நாகராஜன், ஆகியோர் வெட்டியும், தோழர்கள் சதாசிவம், கிருஷ்ணசாமி ஆகியோர் ஒட்டியும் பேசினர். இறுதியில் பெரும்பாலான வாக்குகளை பெற்று தீர்மானம் நிறைவேறியது. (ஓ. தி.)

* * *

பெரியசார் இராமசாமிநகர் பெங்களூர்:—இவ்வூர் பொது மக்களின் கூட்டமொன்று 21-10-49ல் நடைபெற்றது. அதுபோது இவ்வூர் கிராமப் பஞ்சாயத்து திருத்தியமைக்கப்பட்டது. தலைவர்:— பி. முனுசாமி, செயலாளர்:—சி. முனுசாமி, பொருளாளர், பி. குப்பபா. நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (ஓ-தி)

* * *

தூத்துக்குடி— இவ்வூர் சண்முகபுரம் பன்னீர்செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கத்தின் செயற்குழு கூட்டம் 21—10—49ல் நடைபெற்றது. அதுபோது புதிய ஆண்டுக்கு செயற்குழுத் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்:—நா. பக்மேர்தி; துணைசெயலாளர்:—ஆ. வேலாயுதம்; பொருள் உறுப்பினர்:—பி. எஸ். சண்முகம் விளம்பர உறுப்பினர்:—கே. நவமணி; கணக்குத் தணிக்கையாளர்:- அ. செல்லத்துரை 10 பேர் கொண்ட செயற்குழுவொன்றும் அமைக்கப்பட்டது. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

• • •

உடர்தை-இவ்வூர் பன்னீர்செல்வம் வாலிபர் சங்கத்தின் சார்பாக தோழர் எஸ். பி. சாமி அவர்கள் தலைமையில் 21-10-49 அன்று ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் தி. மு. க. கொடியை உயர்த்தினர். தோழர் எஸ். ஏ. அமுதம் சிறிது நேரம் பேசியபின் தோழர் டி. கே. சீனிவாசன் தி. மு. கழகம் பற்றியும், தீபாவளி பற்றியும், தற்கால அரசியல் நிலைபற்றியும் சுமார் 1½ மணி நேரம் பேசினார். கூட்டத்திற்கு சுமார் 5000 பேர் வந்திருந்தனர். இறுதியில் திராவிடநாட்டுப் பண்பாடினர். பின் எஸ். சீனிவாசன் நன்றி கூறக்கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

டெல்லிக்குக் காவடியெடுக்கும் நிலை மாறவேண்டும்

ஈரோடு பெரிய அக்ரகாரத்தில் தோழர்கள் முழக்கம்

ஈரோட்டிற் கடுத்த பெரிய அக்கிரகாரத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்று 30—10—49 மாலை 6-30 மணிக்குப் பேர்தாம்பாளையம் தோழர் கே. பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. ஈரோடு தி. மு. கழக சார்பிலேயே இக்கூட்டம் கூட்டப்பட்டது. ஈரோட்டிலிருந்து தோழர்கள் பி. பழனிச்சாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம், கோபி ஜி. என். ராஜா, எஸ். அப்பாவு, எ. சங்கரையா, என். இ. பாலகுரு, ஆர். பெருமாள், ஆர் என் ரங்கராஜன், கே. ஜகரியா, எம். பழனியப்பன், புருஷோத்தமன் முதலிய பல தோழர்கள் சென்றார்கள்.

நாசமணி தோழர் டி. வி. நாராயணசாமி திராவிடப் பண்ணமிக இனிமையாகப் பாடினார். தோழர் எ. சங்கரையா முன்மொழிய, ஆர். பெருமாள் வழி மொழிய தோழர் பி. பழனிச்சாமி தலைமையேற்று தி. மு. கழகம் ஏற்பட்டதின் அவசியத்தைப் பற்றிப் பேசினார். பின் தோழர் என். இ. பாலகுரு தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்து சொற்பொழிவாற்றினார்.

அடுத்து தோழர் எஸ். அப்பாவு பேசினார்.

பின் தோழர் எஸ் ஆர். சுப்பிரமணியம் பேசினார்

எஸ். ஆர் சுப்பிரமணியம்

இன்று நாம் திராவிட முன்னேற்றக் கழகம் இங்கு ஏன் துவக்குகிறோம் என்றால். தலைவர் பெரியார் அவர்கள் செய்துகொண்ட பொருந்தாத் திருமணத்தை நாம் ஏற்றுக்கொள்ளாமல் விலகி நின்று அவர் திருமணத்தை எதிர்த்தக் காரணத்தால் நம்மையெல்லாம் துரோகிகள், சதிகாரர்கள் சூழ்ச்சிகாரர்கள், எதிரிகள் என்றெல்லாம் தூற்றிய காரணத்தால் நாம் திராவிட கழகத்தை, பெரும்பான்மையால் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் எதிர்த்தும், நமக்கு மெஜாரிட்டி இருந்தும், கைப்பற்றும் எண்ணத்தைப் பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுத்து பெரியார் செய்து வந்த அறிவுப் பிரசாரத்தை நாம் தனியாக தி. மு. கழகம் என்ற அமைப்பைக் கொண்டு இன்று பட்டி தொட்டி நாடு நகரங்களெங்கும் முன்னேற்றக் கழகங்கள் துவக்க விழா நடைபெறுகிறது. நாட்டில் இன்று நடைபெறும் காங்கிரஸ் பாசிச ஆட்சி, அடக்கு முறையாலேயே மக்களை ஆளப்பார்க்கிறது. பேச்சுரிமை பறிக்கப்படுகிறது. நமது இயக்கத் தோழர்கள் எழுதிய 'இராவணகாவியம்', 'திராவிடர் நிலை'. 'இலட்சிய வரலாறு' முதலிய புத்தகங்களைத் தடைசெய்து எழுத்துரிமையைப் பறித்துள்ளது. இன்னும் தொழில் இயக்கம் பாட்டாளிகள் கிளர்ச்சிகளை துப்பாக்கிகொண்டும் தடிகொண்டும், அடக்குமுறைச் சட்டத்தைஏவியும் அடக்கிவருகிறது. காங்கிரஸ், பதவிக்கு வருமுன் சொன்ன வாக்குறுதிகளை மறந்து சர்வாதிகார ஆட்சி நடத்துகின்றனர்.

திராவிட நாடு, தென் நாடு ஒரு மாகாணமாயிருந்தாலும் இம்மாகாணம், தான் வசூலிக்கும் வரிகள் அனைத்தும் வைத்துக்கொண்டு, மத்திய சர்க்கார் வெளி நாட்டு விவகாரம், போக்குவரத்து முதலியவைக் கவனிக்க ஒரு சிறு தொகை கொடுக்கலாமே ஒழிய அனைத்தும் மத்திய சர்க்காரிடம் ஒப்புவித்துவிட்டு பின்னர் பிச்சை கேட்கும் முறையில் தினம் டெல்லி செல்லும் நிலைமாறி சுதந்திரம் வேண்டும். கல்வியில் ஒரு புதிய கோட்பாடும், பகுத்தறிவும் புகுத்தப்பட்டு மக்கள் அனைவரும் நன்றாய் வாழ புதியதொரு சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த உடனடியாக சட்டசபையிலும் நல்லறிவுரைப் பிரச்சாரம் செய்ய திராவிட முன்னேற்றக் கழகம் முயலும்" என்று சொல்லி முடித்தார்.

பின் ஜி. என். ராஜா அவர்கள் மிக உணர்ச்சி ததும்ப திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் தோன்றியது பற்றியும். அது செய்துவரும் வேலைகளைப் பற்றியும், சர்க்கார் நடந்துவரும் போக்கைப் பற்றியும் பேசினார். சில தோழர்கள் கேட்ட கேள்விகட்கும் ஆணித்தரமான பதில் கூறினார். தலைவர் முடிவுரையுடனும், சங்கரையா நன்றிகூறலுடனும் கூட்டம் கலைந்தது.

இரவு பெரியக்கிரகாரம் தோழர்களால் வந்திருந்த முக்கியஸ்தர்களுக்கு உணவளிக்கப்பட்டது. பின் பெரியக்கிரகாரம் கழகம் ஒன்று அமைக்கப்பட்டது.

இக் கூட்டம் நன்முறையில் நடைபெறுவதற்குப் பெரியக்கிரகாரம் தோழர்கள் கே அப்துல் ரஹிமான், ஆர். எஸ். இஸ்மாயில், சி. எஸ். எம். முகம்மது உசேன், ஜி. கமால்பாஷா, சி. எம். அப்புல்லா ஆகியோர் ஒத்துழைத்தார்கள்.

செக் ஆட்சியின் சிறந்த தொண்டு

நம் அரசாங்கம் பின் பற்றுமா?

செக்கோஸ்லோவேகியாவிலிருந்த பல மாதா கோவில்களின் சொத்துக்களையும்; நிலங்களையும் அரசாங்கமே கிரகித்து நடத்துவதென்றும் முடிவு செய்து இம்மாதம் முதல் நாளன்று, அவைகளையும் தம் வசமாக்கிக் கொண்டனர். கோயில் திருப்பணிக்கு வேண்டிய ஆட்கள் சம்பளம், இதர முதலிய அனைத்தையும் அரசாங்கமே கவனித்துக்கொள்ளும்.

சென்னை அரசாங்கம் இந்த நற்செயலைக் கவனித்து, இறைப்பின் பற்றிலும், பெருந்தொகை கோவில்களில் விழலுக்குப் பாடுவதை நிறுத்தி, நல்ல நிலங்களில் செய்யலாம். நாட்டின் முன்னேற்றத்திற்காண பல நல்ல தொண்டுகளைக் கோயில் நிதிகளிலிருந்தே செய்து கொண்டு போகலாம். சென்னை அரசாங்கம் துணிவுகொண்டு இதனைச் செய்வதை விட்டு பல கோவில்களின் பணத்தை அரசாங்கப் பொறுப்பில் எடுத்துக்கொண்டு பணத்தைப் பாழாக்குவதோடு, பல தொழில்களை ஏற்படுத்தவும் முடியுமே? மற்ற எல்லா நாடுகளிலும் அரசாங்கத்தார் ஏற்கனவே இப்படிச் செய்கின்றனர். நமது நாட்டிலும் அதுபோல் செய்யக் கூடாதா? அரசாங்கம் துணிவுகொண்டு இத்துறையில் இறங்க வேண்டாமா?

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

வேண்டுகோள்

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டு வருவது எனது பெருமகிழ்ச்சி; பாராட்டுதல். கழகங்களின் தேதி விபரம் அனுப்பப்பட்டு வருகின்றன. இன்னும் கழகங்கள் திறக்கப்படாத இடங்களில் விரைவில் அமைக்க வேண்டுகிறேன். தேர்தல் விபரத்துடன், ஒவ்வொரு செயலாளரின் தெளிவான முகவரியுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

கே. ஏ. மதியழகன்
அமைப்பாளர்
திராவிட
மாணவர் முன்னேற்றக் கழகம்
80/79 செப்புசாமி தெரு,
சென்னை—1.

"பொன்னி" தமிழ் மக்களின் குடும்பப் பத்திரிகை

ஒவ்வொரு குடும்பத்திலும் ஆடவரும் பெண்மணியும், முதியவரும் இளைஞரும், சிறார் சிறுமிகளும் விரும்பிப் படிக்கும் சிறந்த இதழ் மாதம் இருமுறையாக 10, 25 தேதிகளில் வெளிவருகிறது விலை அணா 5.

10—11—49 முதல் 72 பக்கங்களுடன் பல புதிய பகுதிகளுடன் சிறக்க வெளிவருகிறது

"பொன்னி" த. பெ. 79 புதுக்கோட்டை.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/42, Muthumari Chetty Street Madras-1.